# குளியாப்பிட்டி பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 18 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குளியாப்பிட்டி பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப் பணம் வருமானம் ரூபா 18,615,579 ஆக இருந்த போதிலும் அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 16,997,572 தொகையாகக் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,618,007 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 3,606,478 தொகை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படாமையின் காரணமாக சம்பள மீளளிப்பு வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு மீதி ரூபா 3,606,478 தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 6,768,285 ஆக இருந்த போதிலும் நூலகப் புத்தக மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 6,175,089 ஆனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நூலகப் புத்தகங்களின் மீதி ரூபா 593,196 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரித் தொகை ரூபா 314,946 ஆக இருந்த போதிலும் பதிவேடுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி காணப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வரி ரூபா 314,946 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 169,819,581 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,816,680 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,915,625 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 276 | 252 | 402 |
| (ii) | வாடகை | 4,758 | 4,793 | 39 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,032 | 1,068 | 43 |
| (iv) | ஏனைய வருமானம் | 48,553 | 75,708 | 27,502 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,588,375 ஆகவும் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 21,274,633 ஆகவும் இருந்தது.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதி இலங்கை அரசாங்க வணிகக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 82,310 தொகை செலவில் கைவிரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் முறையான கேள்வி நடைமுறைகளின் கீழ் பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு கூறுவிலைகள் கோரி ஆகக் குறைந்த கூறுவிலைகளின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இயந்திரம் 2011 யூன் 30 ஆந் திகதி தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் கைவிரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் ஓர்

ஆண்டு உத்தரவாதக் காலமும் வழங்கப்பட்டிருக்கும் போது அதனைப் பழுதுபார்ப்பதற்கு சபையினால் உரிய நிறுவனத்திற்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பௌதீகப் பரிசோதனை / மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளினால் உறுதிப்படுத்தப்படாத 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட் காணி, கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 88,619,214 ஆக இருந்ததுடன் தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அச்சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,677,476 ஆக இருந்தது.

### 2.5 மனித வள முகாமைத்துவம்

சபையின் அங்கீகரிகக்ப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 94 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 84 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்தது. அதனுள் அங்கீகரிக்கப்பட்ட 04 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 03 உம், 04 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் 01 உம், 09 நூலகர் பதவிகளில் 06 உம் வெற்றிடமாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக அமைய மற்றும் நாட்கூலி அடிப்படையிலும் சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்படுகின்ற 09 ஊழியர்களும் சேவையில் ஈபடுத்தப்பட்டிருந்தனர்.

### 2.6 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

(அ) வெவகம மத்திய வீதியை விரிவாக்கும் போது காணி உரிமையாளர்களின் எதிர்ப்பு காணப்பட்ட போதும் அதனைக் கவனத்திற் கொள்ளாது அந்த வீதியை விரிவாக்கியமையின் காரணமாக பாதிப்பிற்குள்ளான தரப்பினரினால் தமக்கு ஏற்பட்ட ரூபா 100,000 தொகையான நட்டத்தை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை முதலாவது எதிராளி 2010 நவம்பர் 30 அந் திகதி வழக்கு தொடுத்திருந்ததுடன் சபையினால் ஆண்டின் இறுதிவரை 15 வழக்குத் தவணைகளுக்காக ரூபா 21,500 தொகை சட்டத்தரணி கட்டணமாக செலவிட்டிருந்தது.

(ஆ) முறையான வழக்குப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் சபைக்குரிய வழக்குகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.7 செயற்பாட்டு செயற்திறன்னின்மைகள்**

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,452,460 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 19,501 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 செலவீன விடயங்களின் கீழ் ரூபா 69,961,000 தொகையான நிதியேற்பாடு விஞ்சியதற்காக செலவீன மாற்றம் அல்லது குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் 31 கிலோ மீற்றர் அளவான வீதியினைப் பராமரிப்பதற்கான ரூபா 81,726,542 தொகையான கிரயத்தை செய்திருந்ததுடன் மயான நிலங்கள், காண் முறைமைகள் மற்றும் சிறுவர் பூங்காக்களுக்கான ஆண்டின் போது ஏற்பட்ட பராமரிப்புக் கிரயம் என வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 6,300,000 தொகையான 19 மூலதன செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 1,678,000 தொகையான 12 நலன்புரி செயற்திட்டங்கள் என்பன மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருள்களில் இருந்து சேதன கழிவுப் பொருள் கூட்டுப் பசளை உற்பத்திற்காக குளியாப்பிட்டி நகரசபை கழிவுப் பொருள் நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய கழிவுப் பொருட்கள் வகைப்படுத்தப்படாமல் 03 தனியார் காணிகளின் குழிகளில் அகற்றப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) மனிதவள முகாமைத்துவம்